# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8074761

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் திருச்சி | PS: காவல்நிலையம் ஊ.த.க பிரிவு | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 3/21 | Date: நாள் 01.10.2021

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018) | Sections பிரிவுகள்: 7, 7A
   (ii) Act சட்டம்: கு.வி.மு.ச. 1973 | Sections பிரிவுகள்: 102
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் 30.9.21 | Date to : நாள் வரை 30.9.21
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 1530 | Time to : நேரம் வரை 2015
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.21 | Time : நேரம் 1200 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக [illegible] சோதனை நடத்த செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4.5 Km வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி [illegible] அலுவலகம் முசிறி காப்பகம், முசிறி, திருச்சி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — | District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. செந்தில் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ரெங்கராஜ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 13.4.66 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் SUPDT. URBAN LAND CEILING | (g) Address : முகவரி
   AND URBAN LAND CEILING OFFICE, TRICHY

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1.10.21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

G. 01.10.2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 01.10.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் (G. [illegible])
Rank: நிலை ……………………No. எண் ………
காவல் ஆய்வாளர், [illegible]

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்ப வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.03/2021 முதல் தகவல் அறிக்கை காலம் 7ல் கண்ட எதிரிகளின் பெயர்கள்

1) திரு.கனகசபை, த/பெ.மாணிக்கம்பிள்ளை, 65, வெள்ளாளர்தெரு, உமையாள்புரம், செவந்தலிங்கபுரம், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம்
2) திரு.விஸ்வநாதன், த/பெ.ரெத்தினம்பிள்ளை, 12, அபிராமிதெரு, முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.
3) திரு.பெருமாள், த/பெ.கண்ணன், 4/266, சேலம் மெயின்ரோடு, மணமேடு, தொட்டியம் தாலுக்கா, திருச்சி மாவட்டம்.
4) திரு.ராஜேஷ், த/பெ.முத்துசாமி, செட்டியார்தெரு, ஜம்புநாதபுரம் மெயின்ரோடு, முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.
5) திரு.ராஜாராம், த/பெ.ரெங்கராஜ், 36, திருச்சி ரோடு, GH அருகில், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.
6) திரு.முத்துக்கருப்பன், த/பெ.முத்தம்பலம், 8ஏ, வடக்கு செல்வந்தர்தெரு, ஜெயங்கொண்டான், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம்.

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.03/2021 முதல் தகவல் அறிக்கை காலம் 12ன் தொடர்ச்சி

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளாகிய நான் 01.10.2021ஆம் தேதி காலை 12.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.R.செந்தில், துணை வட்டாட்சியர் (கண்காணிப்பாளர்), நகர்புற நிலவரி மற்றும் நகர்புற நில உச்சவரம்பு அலுவலகம், பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி, 30.09.2021ம் தேதி திருச்சி மாவட்டம், முசிறி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறையின் (மகஜர்) மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். மேற்படி அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறை விபரங்கள் பின்வருமாறு: அனுப்புநர் திரு.R.செந்தில், துணை வட்டாட்சியர் (கண்காணிப்பாளர்), நகர்புற நிலவரி மற்றும் நகர்புற நில உச்சவரம்பு அலுவலகம், பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அய்யா, பொருள்: திருச்சி மாவட்டம், முசிறி சார்பதிவாளர் அலுவலகம் – திடீர் சோதனை 30.09.2021ம் தேதி மேற்கொண்டது – தொடர்ச்சியாக – ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி.... திருச்சி ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலான முசிறி சார்பதிவகத்தில் பத்திர பதிவு உள்ளிட்ட ஏனைய அரசு அலுவல்களை பொதுமக்களுக்கு செய்து கொடுக்கவும், முறைகேடான முறையில் செய்து கொடுக்கவும் சார்பதிவக பணியாளர்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் தங்களது செல்வாக்கை பயன்படுத்தியும், பத்திர பதிவு உள்ளிட்ட அரசு பணிகளுக்காக வரும் பொது மக்களிடம் கையூட்டு கேட்டு பெற்று நேரிடையாகவும் மறைமுகமாகவும் பணியாளர்களிடம் கொடுத்து அரசு அலுவல்களை செய்து முறைகேடாகவும் செய்து அதன் மூலம் பயன் பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில், 30.09.2021ம் தேதி பிற்பகல் சுமார்

13.30 மணியளவில், திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து, திருச்சி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் திரு.ஞா.சக்திவேல் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு திருச்சி மாவட்டம், முசிறி சார்பதிவாளர் அலுவலகத்தை 15.30 மணிமுதல் 20.15 மணி வரை திடீர் சோதனை மேற்கொண்டு, மேற்படி திடீர் சோதனையின்போது ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் (1)திரு.கனகசபை, த/பெ.மாணிக்கம்பிள்ளை, 65, வெள்ளாளர்தெரு, உமையாள்புரம், செவந்தலிங்கபுரம், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம், (2) திரு.விஸ்வநாதன், த/பெ.ரெத்தினம்பிள்ளை, 12, அபிராமிதெரு, முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம், (3) திரு.பெருமாள், த/பெ.கண்ணன், 4/266, சேலம் மெயின்ரோடு, மணமேடு, தொட்டியம் தாலுக்கா, திருச்சி மாவட்டம், (4) திரு.ராஜேஷ், த/பெ.முத்துசாமி, செட்டியார்தெரு, ஜம்புநாதபுரம் மெயின்ரோடு, முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம், (5) திரு.ராஜாராம், த/பெ.ரெங்கராஜ், 36, திருச்சி ரோடு, GH அருகில், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம் மற்றும் (6) திரு.முத்துக்கருப்பன், த/பெ.முத்தம்பலம், 8ஏ, வடக்கு செல்வந்தர்தெரு, ஜெயங்கொண்டான், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம் ஆகியோர் தாங்கள் வைத்திருந்த பணம் பற்றி சரியான காரணம் சொல்லாததால் ரூ.1,38,500/–ம், மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் பதிவு வைப்பறைக்கு அடுத்தாற்போல் மற்றொரு காலி அறையில் அட்டை டப்பாவில் கிடந்த ரூ.2,750/–ற்கு யாரும் உரிமைகோர முன்வராததால் மேற்படி பணம் ரூ.2,750/–ம் ஆக கூடுதல் ரூ.1,41,250/ஐ எனது முன்பாக காவல் ஆய்வாளர் திரு.ஞா.சக்திவேல் அவர்களால் கைப்பற்றப்பட்டு, திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) 15.30 மணிமுதல் 20.15 மணிவரை தயார் செய்யப்பட்டது. இத்துடன் 30.09.2021ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) இணைக்கப்பட்டுள்ளது, நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள Sd.xxxx (R.செந்தில்) 01.10.2021, <u>Submitted to the Court of the Hon'ble Special Judge for the trial of cases under the PC Act-1988, Trichy.</u> Received this report at 12.00 hours on 01.10.2021 and registered a case in Trichy V&AC Cr.No.03/2021, u/s 7, 7(A) of Prevention of Corruption Act 1988 (as amended in 2018) and 102 Cr.P.C at 13.00 hrs on 01.10.2021.(Sd) (xxxxx), 01.10.2021 (G.SAKTHIVEL) Inspector of Police, V&AC, Trichy. <u>திடீர் சோதனை செயல்முறை (மகஜர்)</u> இன்று 30.09.2021 பிற்பகல் 15.30 மணிக்கு திருச்சி மாவட்டம், முசிறியில், நாமக்கல் – திருச்சி சாலையில் அமைந்துள்ள முசிறி சார்பதிவகத்தை, ஆய்வுக்குழுவால் நியமிக்கப்பட்ட திரு.R.செந்தில், துணை வட்டாட்சியர் (கண்காணிப்பாளர்), நகர்புற நிலவரி மற்றும் நகர்புற நில உச்சவரம்பு அலுவலகம், பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்கள் தலைமையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.ஞா.சக்திவேல் மற்றும் அவாது குழுவினர் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் செயல்முறை நடவடிக்கை மகஜர். திருச்சி மாவட்டம், முசிறியில், நாமக்கல் – திருச்சி சாலையில் அமைந்துள்ள முசிறி சார்பதிவகத்தில், பத்திரப்பதிவு உள்ளிட்ட ஏனைய அரசு அலுவல்களை பொதுமக்களுக்கு செய்து கொடுக்கவும், முறைகேடான முறையில் செய்து கொடுக்கவும் கூஷ சார்பதிவக பணியாளர்களிடம்,

ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் தங்களது செல்வாக்கை பயன்படுத்தியும், பத்திர பதிவு உள்ளிட்ட அரசு பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டுப்பெற்று நேரிடையாகவும், மறைமுகமாகவும் பணியாளர்களிடம் கொடுத்து அரசு அலுவல்களை செய்து/முறைகேடாகவும் செய்து அதன் மூலம் பயன் பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில், இன்று **30.09.2021** பிற்பகல் சுமார் **15.30** மணிக்கு கூ௸ சார்பதிவக அலுவலகத்தை முன்னறிவிப்பின்றி திடீர் சோதனை செய்வதற்கு கூ௸ சார்பதிவக அலுவலக முன்பக்க பிரதான வாயில் வழியே உள்ளே நுழைந்ததும் கூ௸ சார்பதிவகத்தை சுற்றி நான்கு திசைகளிலும் காவலர்களை பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது. அடுத்து சார்பதிவகத்தின் உள்ளே நுழைந்ததும் வடக்கு தெற்காக வராண்டாவும், அதன் உள்ளே நுழைந்ததும் பெரிய ஹாலும் அதன் ஹாலில் கிழக்கு பார்த்து ஆவண புகைப்படம் எடுக்கும் பணியாளரும், அவருக்கு பின்னால் ஒரு மேஜையும், அதற்கு அடுத்து வடக்கு பார்த்து சார்பதிவாளர் அமர்ந்திருக்கும் மேஜையும், சார்பதிவாளர் அமர்ந்திருக்கும் மேஜையின் மேற்கு பக்கம் கண்ணாடி தடுப்பிலான அறையும் உள்ளது. ஹாலின் இடதுபுறம் தெற்கு பார்த்து வாசலுடன் பதிவு வைப்பறையும் உள்ளது. ஹாலின் வலது ஓரத்தில் வடக்கு பார்த்து இருக்கையில் ஒரு நபர் அமர்ந்திருந்தார், அவர் ஆவணங்களில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். அலுவலகத்தின் உள்ளே சுமார் **15**–க்கும் மேற்பட்ட நபர்கள் ஆங்காங்கே நின்று கொண்டிருந்தார்கள். அலுவலகத்தின் அனைத்து அறைகளுக்கும் காவலர்களை அனுப்பி பாதுகாப்புக்காக நிற்க செய்யப்பட்டது. சார்பதிவாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் வந்திருக்கும் துணை வட்டாட்சியர் (கண்காணிப்பாளர்) மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினரையும், திடீர் சோதனை செய்ய வந்த விபரத்தையும் கூறி சோதனை தொடங்கப்பட்டது. சார்பதிவாளர் பெயரை கேட்க அவர் தன் பெயர் திரு.சுகுமார், உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர் என்றும், உதவியாளர், உறையூர் சார்பதிவகம், திருச்சி மாவட்டம் என்றும், அயல்பணியாக முசிறி சார்பதிவகத்தில் சார்பதிவாளர் பொறுப்பில் இருப்பதாக தெரிவித்தார். அவரின் இருக்கைக்கு எதிரே சுமார் நான்கைந்து பேர் நின்று அவரிடம் பேசிக்கொண்டிருந்தார்கள் சார்பதிவாளர் ஹாலின் மேற்குபுறம் கண்ணாடியிலான கணிப்பொறி அறை இருந்தது, அதில் 2 ஆண், 1 பெண் ஊழியரும் இருந்தார்கள். அந்த கணிப்பொறி அறையினுள் அவர்கள் அலுவலகத்தில் இருந்ததற்கான காரணம் குறித்து கேட்க தங்களது பெயர் மணிவேல், த/பெ.பழனியப்பன் என்றும் தான் உதவியாளராக பணிபுரிவதாகவும் தான் தபால், ஆவண பதிவிற்கு வருபவர்களை புகைப்படம் எடுப்பது போன்ற பணிகளை பார்த்து வருவதாகவும் தெரிவித்தார், மு.கார்த்திக், த/பெ.முத்துகண்ணன் என்றும் தான் TCS Staff என்றும் தான் கேமிரா ஆப்ரேட் செய்வதாக தெரிவித்தார், வே.கீதா, த/பெ.வேதன் என்றும் தான் TCS Staff என்றும் தான் DEO என்றும் தெரிவித்தார். சார்பதிவாளர் அலுவலக ஹாலின் சார்பதிவாளர் இருக்கைக்கு அடுத்து தேவிகா, த/பெ.மெய்யப்பன் என்றும் தான் இளநிலை உதவியாளராக பணிபுரிவதாகவும், தான் பிறப்பு இறப்பு சான்றிதழ் ஆன்லைனில் பதிவு செய்தல் பணி என்றும் தெரிவித்தார், மேற்படி ஹாலிற்கு அடுத்து மேற்கு பார்த்து அமர்ந்திருந்தவரின் பெயர் கேட்க தனது பெயர் மதியழகன், இளநிலை உதவியாளராக இருப்பதாகவும் சார்பதிவகத்தில் பதிவாகும் ஆவணங்களை நகல் எடுக்கும் பணி செய்வதாகவும் தெரிவித்தார். இளநிலை உதவியாளர் மதியழகன்

இருந்த அறைக்குள் பழைய ஆவணங்களை வைத்திருக்கும் அறை ஒன்றும் உள்ளது. மேற்படி அலுவலகம் முழுவதும் மின்வசதி செய்யப்பட்டிருந்தது. மேலே கூறப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தல் வராண்டாவில் நின்றிருந்தவர்களை விசாரித்து அவர்களில் பதிவுக்கு வந்திருந்த பொதுமக்களை மட்டும் விசாரித்து அவர்களது பணி முடிந்தவர்களை வெளியில் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. பதிவுக்கு தொடர்பற்ற சார்பதிவாளர் அலுவலகத்திற்குள்ளே வருவதற்கு வேறு எந்த காரணமும் இல்லாத 6 ஆவண எழுத்தர்கள்/ இடைத்தரகர்களை துணை வட்டாட்சியர் (கண்காணிப்பாளர்) அவர்களின் பெயர் முகவரி கேட்டு விசாரிக்க, அவர்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் வந்ததற்காக சொன்ன காரணம் ஆய்வுக்குழுவால் நியமிக்கப்பட்ட துணை வட்டாட்சியருக்கு திருப்திகரமாக இல்லாததால் அவர்களை காவலர்கள் உதவியுடன் சோதனை செய்ய ஒவ்வொரு நபரிடமும் கீழே கண்டவாறு அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமும், தனியாக சொந்தப்பணமும் வைத்திருந்தது தெரியவந்தது. அதன் விபரம்

| வ. எண் | பெயர், முகவரி | கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமும் வைத்திருந்த இடமும் | சொந்தப்பணம் இருந்த இடம் |
|---|---|---|---|
| 1 | திரு.கனகசபை, வயது–71/2021, த/பெ.மாணிக்கம்பிள்ளை, 65, வெள்ளாளர்தெரு, உமையாள்புரம், செவந்தலிங்கபுரம், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம். | ரூ. 10,500/– தனது உள் பனியனில் இருந்து | ரூ. 300/– மேல் சட்டையின் இடது புற வெளிப்பாக்கெட் |
| 2 | திரு.விஸ்வநாதன், வயது 53/2021, த/பெ.ரெத்தினம்பிள்ளை, 12, அபிராமிதெரு, முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம். | ரூ. 1500/– பேண்டின் வலது மற்றும் இடது புற பாக்கெட்டுகள் | ரூ.320/– மேல் சட்டையின் இடது புற வெளிபாக்கெட் |
| 3 | திரு.பெருமாள், வயது 28/2021, த/பெ.கண்ணன், 4/266, சேலம் மெயின்ரோடு, மணமேடு, தொட்டியம் தாலுக்கா, திருச்சி மாவட்டம். | ரூ.46,000/– பேண்டின் வலது மற்றும் இடது புற பாக்கெட்டுகள் | ரூ.150/– மேல் சட்டையின் இடது புற வெளிபாக்கெட் |
| 4 | திரு.ராஜேஷ், வயது 20/2021, த/பெ.முத்துசாமி, செட்டியார்தெரு, ஜம்புநாதபுரம் மெயின்ரோடு, முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம். | ரூ. 1500/– பேண்டின் வலது மற்றும் இடது புற பாக்கெட்டுகள் | ரூ.300/– மேல் சட்டையின் இடது புற வெளிபாக்கெட் |
| 5 | திரு.ராஜாராம்,வயது 44/2021, த/பெ.ரெங்கராஜ், 36, திருச்சி ரோடு, GH அருகில், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம். | ரூ.49,000/– பேண்டின் வலது மற்றும் இடது புற பாக்கெட்டுகள் | ரூ.700/– மேல் சட்டையின் இடது புற வெளிபாக்கெட் |
| 6 | திரு.முத்துக்கருப்பன், வயது72/2021, த/பெ.முத்தம்பலம், 8ஏ, வடக்கு செல்வந்தர்தெரு, ஜெயங்கொண்டான், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம் | ரூ.30,000/– தனது உள் டிரவுசர் வலது பாக்கெட் | ரூ.800/– மேல் சட்டையின் இடது புற வெளிப்பாக்கெட் |

மேலே கண்ட வரிசை எண் 1 முதல் 6 நபர்களிடமும் உள்ள சொந்த பணம் தவிர, மற்ற பணம் பற்றி ஆய்வுக்குழுவால் நியமிக்கப்பட்ட துணை வட்டாட்சியர் விசாரிக்க, அவர்கள், தாங்கள் அந்த பணத்தை வைத்திருந்தது பற்றி சரியான காரணம் சொல்லாததால் மேற்படி பணம் பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பெற்று பொதுமக்களின் பதிவு தொடர்பான வேலைகளை சார்பதிவகத்தில் தங்களது செல்வாக்கை பயன்படுத்தியும், கையூட்டு கொடுத்தும் அரசு அலுவல்களை முறைகேடாக செய்து அதன் மூலம் பயன் பெற்று வைத்திருந்த பணமாகவோ அல்லது பணிபுரிபவர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருக்கலாம் என்ற அடிப்படையில் மேற்படி பணம் ரூ.1,38,500/– ஆய்வாளர் திரு.ஞா.சக்திவேல் அவர்களால் இந்த திடீர் சோதனையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி 1 முதல் 6 நபர்கள் வைத்திருந்த மேலே சொல்லப்பட்ட சொந்த பணத்தை அவர்கள் தெரிவித்த முகாந்திரத்தின் அடிப்படையில் அவர்களிடமே ஆய்வுக்குழுவால் நியமிக்கப்பட்ட துணை வட்டாட்சியர் அவர்களால் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து அலுவலகத்தின் அனைத்து அறைகளையும் சோதனை செய்ய சார்பதிக அலுவலகத்தின் பதிவு வைப்பறைக்கு அடுத்தாற்போல் மற்றொரு காலி அறையில் இருந்த சீட்டை டப்பாவில் ரூ.2,750/– இருந்தது. அந்த இடத்தில் கிடந்த பணத்தை பற்றி யாருக்கு சொந்தமான பணம் யார் அங்க போட்டது என்று விபரம் கேட்க, அந்த பணத்தை தன்னுடைய பணம் தான் என்று யாரும் உரிமைகோரா முன்வரவில்லை. அலுவலகத்திற்குள்ளே கேட்பாரற்று கிடந்த அந்த பணம் மொத்தம் ரூ.2,750/–ம் ஆய்வாளர் திரு.ஞா.சக்திவேல் அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. கணிப்பொறி அறையில் இன்று வசூல் செய்யப்பட்ட அரசு பதிவுக்கட்டணங்களின் மொத்த பதிவுகளையும் அதற்கு வசூல் செய்யப்பட்ட தொகையையும் சரிபார்த்ததில் 'அ' கணக்கில் 26 பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு முத்திரை தீர்வையாக ரூ.2,74,602/–ம், பதிவு கட்டணமாக ரூ.1,64,219/–ம் ஆன்லைனில் வசூலிக்கப்பட்டதாக பதிவுகள் இருந்தது. CD கணக்கில் 26 பதிவுகளும், இரண்டு திருமண பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டு ரூ.2,800/– ஆன்லைனில் வசூலிக்கப்பட்டதாக பதிவுகள் இருந்தது. B கணக்கில் ரூ.2/– ஆன்லைனில் வசூலிக்கப்பட்டதாக பதிவுகள் இருந்தது. D கணக்கில் 14 பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.4,244/– ஆன்லைனில் வசூலிக்கப்பட்டதாக பதிவுகள் இருந்தது. Sub-division account தலைப்பில் 11 பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கு ரூ.5,600/– ஆன்லைனில் வசூலிக்கப்பட்டதாக பதிவுகள் இருந்தது. தமிழ்நாடு திருமண பதிவுச்சட்டம் தலைப்பில் ஒரு திருமண பதிவு மேற்கொள்ளப்பட்டு ரூ.130/– அதற்கு ஆன்லைனில் வசூலிக்கப்பட்டதாக பதிவுகள் இருந்தது. தமிழ்நாடு இந்து திருமண பதிவு தலைப்பில் ஒரு திருமண பதிவு மேற்கொள்ளப்பட்டு ரூ.135/– அதற்கு ஆன்லைனில் வசூலிக்கப்பட்டதாக பதிவுகள் இருந்தது. Section 41 account பதிவில் 12 பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டதாக பதிவுகள் இருந்தது. சார்பதிவாளர் முதற்கொண்டு அலுவலகத்தில் உள்ள மற்ற அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களில், பெண் பணியாளரை பெண் ஆய்வாளர் மூலமும் மற்றவர்களை ஆண்காவலர்கள் மூலமும் சோதனை செய்து பார்க்க அவர்கள் சொந்த செலவிற்காக வைத்திருந்த தொகைகளை தனிநபர் பணம் இருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்தது. ஆய்வாளர்

கேட்டுக்கொண்டதற்கிணங்க கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட 30.09.2021ம் தேதிக்கான A கணக்கு விபரம், பிரிவு 41 கணக்கு விபரம், உட்பிரிவு கணக்கு விபரம், CD கணக்கு விபரம் மற்றும் D,B கணக்கு விபரம் ஆகியவைகளை உண்மை நகலிட்டு பெறப்பட்டது. மேலும், முசிறி சார்பதிவாளர் அலுவலக 2021 ஆம் ஆண்டு வருகைப்பதிவேட்டை கேட்க கூடி பொறுப்பு சார்பதிவாளர் திரு.சுகுமார் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 2021 ஜனவரி மாதம் 4ம் தேதி முதல் 30.09.2021 / 01.10.2021 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. முசிறி சார்பதிவக அலுவலர்களின் தனிநபர் பண இருப்பு பதிவேட்டை கேட்க கூடி பொறுப்பு சார்பதிவாளர் திரு.சுகுமார் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 2021 ஜனவரி மாதம் 4ம் தேதி முதல் 30.09.2021 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. மேலும், முசிறி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்த தகவல் தொகுப்பு பணியாளரின் 2021 ஆம் ஆண்டு வருகைப்பதிவேட்டை கேட்க கூடி பொறுப்பு சார்பதிவாளர் திரு.சுகுமார் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 04.01.2021 முதல் 30.09.2021 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. மேற்கண்ட பதிவேடுகள் இந்த திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக ஆய்வாளர் திரு.ஞா.சக்திவேல் அவர்களால் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை இரவு 20.15 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி வேண்டுகோள் கடிதம் உடன் கூடிய திடீர் சோதனையில் கண்டுள்ள எதிரிகள் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் (1)திரு.கனகசபை, த/பெ.மாணிக்கம்பிள்ளை, 65, வெள்ளாளர்தெரு, உமையாள்புரம், செவந்தலிங்கபுரம், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம், (2)திரு.விஸ்வநாதன், த/பெ.ரெத்தினம்பிள்ளை, 12, அபிராமிதெரு, முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம், (3)திரு.பெருமாள், த/பெ.கண்ணன், 4/266, சேலம் மெயின்ரோடு, மணமேடு, தொட்டியம் தாலுக்கா, திருச்சி மாவட்டம், (4)திரு.ராஜேஷ், த/பெ.முத்துசாமி, செட்டியார்தெரு, ஜம்புநாதபுரம் மெயின்ரோடு, முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம், (5)திரு.ராஜாராம், த/பெ.ரெங்கராஜ், 36, திருச்சி ரோடு, GH அருகில், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம், (6)திரு.முத்துக்கருப்பன், த/பெ.முத்தம்பலம், 8ஏ, வடக்கு செல்வந்தர்தெரு, ஜெயங்கொண்டான், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம் ஆகியோர் மீது திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2021, u/s 7, 7(A) of Prevention of Corruption Act 1988 (as amended in 2018) and 102 Cr.P.Cன்படி இன்று 01.10.2021ம் தேதி வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் திரு.R.செந்தில், துணை வட்டாட்சியர் (கண்காணிப்பாளர்), நகர்புற நிலவரி மற்றும் நகர்புற நில உச்சவரம்பு அலுவலகம், பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்கள் கொடுத்த 01.10.2021 தேதியிட்ட கடிதம் மற்றும் 30.09.2021 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறை (மகஜர்) ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை கோப்பில் வைக்கப்பட்டது.

G. Sakthivel 01.10.2021

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI - CORRUPTION
TRICHYRAPPALLY